
பிரின்ஸ் in ஆப்பிரிக்கா!
ரூ.4/-
லயன் காமிக்ஸ்


காமிக்ஸ்





# ஹாட்-லைன்!

வாசக நண்பர்களே,

இம்முறை "லயன் தீபாவளி மலர்" போடாதது குறித்து நிறையக் கண்டனக் கடிதங்கள்! காரணங்களை ஏற்கனவே போன மாதத்து ஹாட்-லைனில் எழுதியிருந்தேன் - இருந்தாலும் மீண்டும் ஒரு Sorry! நிச்சயம் '95 கோடை மலரில்' தூள் கிளப்பி விடுகிறோம் பாருங்கள்!



சென்ற மாத வெளியீடான "பச்சை வணப் பாவை"க்கு mixed reactions. ஒரு சிலருக்குக் கதையில் விறுவிறுப்பு பற்றவில்லை என்ற அபிப்ராயம்! கதையின் plot அப்படிப்பட்டது என்பதால் கதையை வேறுவிதமாகக் கொண்டு போயிருக்க முடியாது - என்பதே எனது பதில்!

ஒரு நண்பனின் கடைசி ஆசையை நிறைவேற்றிவிடுவதற்காகப் புதையலைத் தேடிப் புறப்படுகின்றனர் மாடஸ்டி & கார்வின்! அதே புதையலைத் தேடி திருட்டுக் கும்பல்! இருவரும் மோதுவதே கதை! இதில் தேவையில்லாமல் ஆக்ஷனை திணித்திருந்தால் கதை செயற்கையாகப் போயிருக்கும்! (இருந்தாலும் கூட - வாசகர்களின் மனம் கவரும் action கதைகளையே இனி select பண்ண முயற்சிக்கிறேன்.) "பச்சை வணப் பாவை" அட்டைப் படத்திற்கு ஏகோபித்த பாராட்டுக்கள் கிடைத்துள்ளது.

இம்மாதம் கேப்டன் பிரின்ஸ் குழுவினர் தண்ணியில்லா ஆப்பிரிக்கக் காட்டுக்குச் சென்று அல்லல் படுவதைப் படிக்கப் போகிறீர்கள்! வெகு நாட்களுக்கு முன்னரே விளம்பரம் செய்யப்பட்ட இந்த கதைக்கு இப்போதுதான் சான்ஸ் கிடைத்துள்ளது. படித்துப் பார்த்து உங்கள் எண்ணங்களை எழுதியனுப்புங்கள்!

அப்புறம் ஒரு சூப்பர் நியூஸ்! புத்தாண்டில் பல அட்டகாசமான கதைகளை நீங்கள் படித்து ரசிக்கப் போகிறீர்கள்! ஆர்ச்சி; இரட்டை வேட்டையர்; மிஸ்டர் ஜெட்; டெக்ஸ் வில்லர் ஆகியோரது புதிய கதைகளை தயார் செய்து வருகிறேன்! கதைகளின் விளம்பரம் பின்பகுதியில் உள்ளது! நீண்ட நாட்களுக்குப் பிறகு வரயிருக்கும் இந்த ஹீரோக்கள் அனைவரையும் மிக உற்சாகமாக வரவேற்பீர்கள் என்பது எனக்குத் தெரியும்!

இன்னுமொரு புதிய கதை நம் லயனில் வரயிருக்கிறது. அது பற்றிய முன்னோட்டம் முன் அட்டையில் உள்ளது. மீத விபரங்கள் அடுத்த இதழில்! நெஞ்சைத் தொடப் போகும் உருக்கமான நிஜக் கதை இது!

அப்புறம் ஒரு வழியாக போஸ்டர் போட்டிக்கு முடிவுகள் அறிவிக்க வேண்டிய வேளை வந்து விட்டது! போஸ்டர்களாக மிளிரப் போகும் அட்டைப் படங்கள் :



1) மீண்டும் ஸ்பைடர்
2) பளிங்குச் சிலை மர்மம் (டெக்ஸ் வில்லர்)
3) அதிசயத் தீவில் ஆர்ச்சி!



அவ்வப்போது வரும் 'ஸ்பெஷல்' வெளியீடுகளோடு போஸ்டர்கள் வழங்கப்படும்!

அடுத்த மாதம் இரத்தப் படலம் V வரயிருக்கிறது! அறிமுகம் தேவையில்லாத தொடர் இது என்பதால் மேற்கொண்டு இதைப் பற்றி ஏதும் நான் எழுதப் போவதில்லை!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அதுவரை -

happy reading; Merry Christmas & New Year greetings!

அன்புடன்,

(ஆசிரியர்)



## மாதம் ஒரு வாசகர்



பெயர் : பா. துரை பிரசன்னா வயது : 16

முகவரி : 42/4A, P.K.S. ஆறுமுகநாடார் ரோடு, சிவகாசி - 626 123.

கல்வித்தகுதி : 'மகாநதி' போல் ஓடும் கல்வி எங்கு சங்கமமாகுமோ? இப்போதைக்கு 12ம் வகுப்பு!

| | |
|---|---|
| பொழுதுபோக்குகள் | லயன் காமிக்ஸ் இருப்பதால் வேறு பொழுது போக்கு இருக்க முடியுமா என்ன! இருந்தாலும் பழைய பாடல்கள் கேட்பது, பாரதியார் கவிதைகள் சுவைப்பது, ஓவியம் வரைதல் முதலியவனும் உண்டு. |
| லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? | அப்பா வாங்கிய உங்கள் காமிக்ஸை 1 ஆம் வயதில் கிழித்து சுவைத்த ஆசை, அதன் பின் படித்து சுவைக்க ஆசை. இச்சுவைக்கு ஆதி ஏது! அந்தம் ஏது. |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் | கண்ணகி போல் கற்பில் சிறந்து விளங்கும் நான் உங்கள் காமிக்ஸ் தவிர வேறு எதுவும் விரும்பாதவன் |
| இதுவரை வந்த கதைகளில் மிகவும் பிடித்தது | லக்கிலுக் (சிக்பில் குரு), அதிரடிப்படை (புரட்சித்தீ) (எல்லாக் கதைகளும்) |
| உங்களைத் தவிர வீட்டில் வேறு யாரும் படிக்கிறார்களா? | அப்பா மற்றும் காமிக்ஸ் படிக்க என்றே வரும் விடுமுறை விருந்தினர்கள் கவிதா, கலைச்செல்வி, சுஜாதா |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள் | தங்கப் பேழையில் வைக்க ஆசை! ஆனால் அலமாரியில் தான்! விடுமுறையில் அதன் மேல் படுத்து விடுவேன் |



# பிரின்ஸ் in ஆப்பிரிக்கா





தப்பி ஓடிய ஒருவனை விரட்டித் தொடர்ந்தனர்.
ரட் டட் டட் டட்!
அவனும் சளைத்தவனில்லை!
தொம்!
எங்கும் கொலை வெறி - சர்வ நாசம் - மரணத்தின் நெடி!
கைவெடிகுண்டு அருகிலிருந்ததொரு வீட்டு ஜன்னலை சிதறடித்தது!


மம்மி... என்ன ஆச்சு..?
சொல்கிறேன்... முதலில் நீங்கள் பதுங்கிக் கொள்ளுங்கள்
இப்போ சொல்லுங்கள்!
ஊமை விளையாட்டு விளையாடணும், நீங்க... இல்லேன்னா ஆபத்தாயிடும் -புரிஞ்சுதா?
நான் திரும்பி வருகிற வரைக்கும் இப்படியே இருக்கணும் - மூச்சு விடக் கூடாது!
ஓ.கே.!
ப்பசு!


தா..தா..மஸ்?
வடாங்கோக்கள்! புரட்சிக் கும்பல்..! வந்து கொண்டிருக்கிறது மிஸஸ் ரயான்... எதிர்ப்பட்டோரை எல்லாம் கொல்லுகிறார்கள்!
இரத்த ஆறு ஓடுமாம்... புரட்சி வந்து விட்டது மிஸஸ் ரயான்...
வாகன சப்தம் கேட்கிறது... ஆனால் அதிக எண்ணிக்கையில் இல்லை.
சாதாரண கலகக்காரர்களாக இருக்கலாம்... எதற்கும் நான் கம்பெனிக்கு போன் பண்ணுகிறேன்... குழந்தைகளிடம் இது பற்றி பேச வேண்டாம்... தாமஸ்!


இணைப்பை துண்டித்திருப் பார்களோ..?
ட்ர்ர்ரிங்ங்
ஹலோ..? பாப்... ஓ... பாப்... நீங்களா... உங்கள் குரலை கேட்க எவ்வளவு தெம்பாக இருக்கிறது தெரியுமா?... இங்கே வெடி குண்டு வெடித்து ஏகப்பட்ட கலாட்டா... ஹலோ.. பாப்?
நீங்க என்ன சொல்றீங்க?
LOKANGA COPPER MINING COMPANY Ltd.
புரட்சியாளர்கள் இங்கே அங்கே என்று எல்லா இடமும் பரவி-விட்டார்கள்.. எனவே, இருக்குமிடத்தை விட்டு நகர வேண்டாம். பீதியடைய தேவையில்லை.. நான் அங்கே வருகிறேன்.. ஹெலனை எச்சரிக்க முயற்சி செய்.. ஜெர்ரி என் பக்கத்தில்தான் இருக்கிறான்.. அவனும் என்னோடு வருகிறான்.


அதைத் தொடர்ந்து அண்டை வீட்டுக்கு போன் பண்ணிய போது -
வெளியே ஒரே அமளி... எதிரிகளை விரட்டியடிக்கும் முயற்சிதான் அது... அடுத்த இருபதாவது நிமிடம் மிஸ்டர் ரயான் அங்கே வந்து விடுவார்.. அப்புறம்
ஹெலன்..! ஹெலன்..? ஏன்... பதிலைக் காணோம்!
தொலைஞ்சது போங்க... மிஸஸ் ரயான் இங்கே வந்து பாருங்க
ஹெலன்..! அவளுக்கென்ன பைத்தியம் பிடிச்சுட்டுதா?


மிரியம்..! மிரியம் ரயான்..! என்னை காப்பாற்றுங்கள்
அவர்களிடம் அவள் அகப்பட்டால் - தொலைந்தாள்.. தாமஸ் நாம் அங்கே போகத்தான் வேண்டும்!
கூடாது...! வெளியே போக உங்களை அனுமதிக்க மாட்டேன்!
டுமீல்!
டுமீல்!
ரட்டட்டட்டட்ட
ஐயோஓஓஓ!
ஐயோ.... அம்மா - வேண்டாம்... விட்டு விடு... என்னை..


லெப்டினென்ட் விம்பா! ஆகா... ரோந்துப் படை வந்துவிட்டது!
டுமீல்
ரயானின் வீட்டுக்கு போவோம் வாருங்கள்... சீக்கிரம்!
ஐயோ.. என்னை விட்டு விட்டுப் போய் விடாதீர்கள்..


ஹெலன்!
உதவிக்கு கூடுதல் படை பலம் வந்து கொண்டிருக்கிறதா லெப்டினென்ட்?
இல்லை...! இன்று காலையில், வடாங்கோக்களிடம் அனுதாபம் கொண்ட சுமார் நூறு பேர் படையை விட்டு ஓடிப் போய் விட்டார்கள்... இது ஒன்றும் புதிதல்ல.. ஆனால் லம்பாஸியிலுள்ள தலைமையகத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளேன்.
பாரசூட் படை என்னவாயிற்று?
ஒரு விமானம் கூட இங்கே வரும் நிலையில் இல்லை.:. சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறார்கள் புரட்சியாளர்கள்.
அதே சமயம் நகரிலுள்ள சுரங்கக் கம்பெனியின் கார் ஷெட்டில் -
ரயான்.... ஜெர்ரி - உங்களுக்கென்ன பைத்தியமா?. நகர் முழுக்க புரட்சியாளர்கள் கண்களில் வெறியோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள் - கைகளில் துப்பாக்கிகளோடு அவர்களை ஊடுருவி போகவே முடியாது.. உங்களால்!
எச்சரிக்கைக்கு நன்றி கர்பீல்டு... ஆனால் நாங்கள் வைத்த காலை பின் வாங்கப் போவதில்லை!


எங்களுடைய மனைவிமார்களும் குழந்தைகளும் எங்களை எதிர்பார்த்து அங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள் - கதவை திறங்கள்
ஓ.கே.. ஓ.கே.
விஸ்ஸ்ஸ்
வ்விர்ர்ர்!


நகர் முழுவதும் நாசக்காடு!
சண்டாளர்கள்...!
அக்கிரமம் இது - என்ன
கொடுமை..!
அப்பப்பா.. படு
பயங்கரம்!


அந்த நரகத்திலிருந்து சுமார் 420 கி.மீ. தொலைவில் -
உங்கள் நன்மைக்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஆற்று வழி பயணம் முழுவதுமாக தடை செய்யப் பட்டிருக்கிறது -உங்கள் பாதுகாப்பை கருதித்தான்!
உள் நாட்டு பாதுகாப்பு இலாகா அலுவலகத்தில் -
மறு உத்தரவு வரும் வரை 'காங்கோ' ஸ்ம்பாஸியினுள்ள துறையில் நிற்கட்டும்!
செக்யூரிட்டி! செக்யூரிட்டி!
எங்களுடைய நாணயம் என்ன ஆவது? 'காங்கோ' எங்களுடைய படகு இல்லை. அதன் சொந்தக்காரரோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு வந்திருக்கிறோம் - அழுகிவிடக் கூடிய சரக்கு! இங்கே வந்து இப்படி முடங்கிக் கிடக்கவா நாங்கள் இவ்வளவு தொலைவு கஷ்டப்பட்டு வந்தோம்?
வேண்டாம் விடு - பார்னே! மேஜர் தன் தீர்மானத்தை மாற்றிக் கொள்ளப் போவதில்லை!
என்னை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டு
...மேலும் இங்கே நிலவரம் காலம் விரயமாவதை...
கால விரயம் என்று நீங்கள் சொன்னது காதில் விழுந்தது மேஜர் கேஹனி..
நேரம் பொன்னானது - இல்லையா? சரி... அப்படியானால் நான் கேட்ட பெட்ரோல் எங்கே? போம்பாஸிலுள்ள என் ஆட்களை நான் பார குட்டிலா அனுப்ப முடியும்!


லாரிகள் வந்து கொண்டிருக்கின்றன லூகாஸ்! உங்களுடைய விமானங்களுக்கு வேண்டிய பெட்ரோல் இன்றிரவுக்குள் நிரப்பப்பட்டு விடும்...!
ஒரு வழியாக!
ம்ம்... நள்ளிரவு 12.05க்கு கிளம்புவதாக வைத்துக் கொண்டாலும் அங்கே போய் இறங்கும் போது விடிந்து விடும்... நாங்கள் செய்யக் கூடியது ஏதாவது மிஞ்சியிருக்குமோ என்னவோ?
நகரம் அதிகமாக பாதிக்கப்படவில்லை என்று நம்புகிறேன். கூட்டுறவுக்காரர்கள் மீதும், சுரங்க ஆசாமிகள் மீதும்தான் வடாங்கோக்களுக்கு ஆத்திரம், பகைமை... அவர்களோடு ரேடியோ தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறோம். நீங்கள் போய்ச் சேரும் வரை தாக்குப் பிடிப்பார்கள்.


வடாங்கோக்களை
மம்... வித்தியாசமான பிரகிருதிகள்! ஆனால் அப்போது கையில் வெட்டரிவாள்களைத் தான் வைத்திருந்தார்களே தவிர இப்போது போல இரஷ்ய தயாரிப்பான மெஷின் கன்களை அல்ல!
நன்றாக போதையை ஏற்றிவிட்டு அப்புறம் யார் மீது பாயச் சொன்னாலும் கண் மூடித்தனமாக பாய்ந்துவிடக் கூடிய ஆசாமிகள்...
இங்கே ஏன் வந்தீர்கள்... யார் உங்களை உள்ளே விட்டது? கெட் அவுட்!
மேஜர்! ஒரு
சுரங்கக் கம்பெனியிலிருந்து அல்ல ஒரு தனி நபரிடமிருந்து
கொடு இப்படி என்னவென்று கேட்போம்


ஜெர்ரி பேசுகிறேன் ஹலோ.. ஹலோ.. லோகான்காவிலிருந்து
என் நண்பர் ரயானின் வீட்டிலிருந்து பேசுகிறேன்... ஹலோ... மறுமுனையில் கேட்கிறதா...
அவர்கள் ஒன்று திரண்டு விட்டார்கள்.. இன்னும் சற்று நேரத்தில் நாங்கள் தாக்கப்படலாம்!
செய்தி பெறப்பட்டது! ஜெர்ரி! நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்களா?
பாதுகாப்பாகவா..? - என்ன கிண்டலா? நாங்கள் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்து சேருவதற்குள் எங்கள் கார் சல்லடை போலாகிவிட்டது... இன்னும் எண்ணி பத்தே நிமிடங்களில் கலகக்காரர்கள் இந்த வீட்டை தாக்கப் போகிறார்கள்! கிளப்பை சேர்ந்த சிறிய விமானத்தை ரயான் கிளப்பப் போகிறார். என் மனைவி, அவருடைய மனைவி, இரு குழந்தைகளும் ஏறிக் கொண்டு விட்டார்கள். ஒரு மணி நேர பயணத்திற்குத்தான் பெட்ரோல்
இருக்கிறது. அவர்களை எப்படியாவது காப்பாற்றவும்! முடிந்தால் நானும்...



மேலே எதுவும் கேட்கவில்லை... விமானம் கிளம்பும் சப்தம்தான் காரணம்...
தனியாக நிற்கும் வீடுகள் அதிக நேரம் தாக்கப்பிடித்து நிற்க முடியாது. பெரிய கட்டிடங்களுக்குள் புகுந்து தாழிட்டுக் கொண்டவர்களை மட்டும்தான் நம்மால் காப்பாற்றி மீட்க முடியும்.
சிறு விமானத்தில் தைரியமாக கிளம்பிய அந்த ரயானை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.. அவர்களை தேடிப் பிடிக்க உடனே ஆவன செய்யப் போகிறேன்.
விமானதளம் இதோ இங்கே இருக்கிறது... இது தான் ரன்-வே.. நான் தான் பைலட் என்று வைத்துக் கொண்டால் எத்திசையில் போவேன்?
கிழக்கு!
ஏய்.. நீ
உஷ்ஷ்.. குறுக்கே வராதே! ஏன் - கிழக்கு?
விமானத்தில் அஞ்சு பேர்!.. ரெண்டு பேர் குழந்தைகளாக இருந்த போதிலும் மலைத் தொடரை கடக்க முடியாத பளு...



விமானத்தில் ரேடியோ இருந்தாலும் நம்மால் தொடர்பு கொள்ள முடியாது அல்லவா?
ஆமாம்... மலைத்தொடர் ஒரு தடை!
சார்லியின் விமானம் இப்போது ஏறத்தாழ அந்தப் பிராந்தியத்தில் தான் வந்து கொண்டிருக்கிறது... எனவே -
உடனடியாக அந்த விமானத்தோடு ரேடியோ தொடர்பு கொடு - சீக்கிரம்!
?
யெஸ்... சார்லிதான் பேசுகிறேன்.... ம்ம்... என்ன... ஓ.கே. - நீங்கள் குறிப்பிடும் சின்ன ரக விமானத்தோடு தொடர்பு கொள்ள முயற்சிக்கிறேன்.
நேராக தளம் வந்தடைய போதுமான பெட்ரோல் மட்டுமே கையிருப்பில் உள்ளதால் ரயான் உடனடியாக சிக்கினால்-நன்றாக இருக்கும்!
என்ன சிந்தனை?
ரயானின் விமானம் பத்திரமாக எங்கேயும் சென்றடையும் சாத்தியம் தெரியவில்லை.... அது விழுந்து நொறுங்கிய அறிக்கை எந்த வினாடியிலும் ரேடியோவில் வந்து கிடைக்கலாம்!


ஏகப்பட்ட இரைச்சல்... ரயானின் குரல் வேறு தெளிவில்லாமல் இருக்கிறது... ஏதாவது செய்ய முடியுமா பார்.
அந்த பிராந்தியத்தில் உள்ள எல்லோருமே நம்மோடு தொடர்பு கொள்ள போட்டி போடுகிறார்கள்... ஒன்றோடொன்று கலந்து... ஹூம்... எதுவுமே உருப்படியாக கேட்க முடியவில்லை.
நீ சொல்வது சரியாக இருக்க முடியாது!
அனுபவத்தை வச்சு சொல்றேன்.. நீங்க நம்பணும்!
ஓ.கே.! ரயான் கீழ்த்திசையில் போகும் பட்சத்தில்... கெஹானி நீ இப்போது...
கொஞ்சம் பொறுங்கள்.
நம் விமானி ரயானோடு பேசுகிறார்... ஆனால் பதில் கேட்கக் காணோம். ஒரு வேளை எதிரிகள் ரயானின் விமானத்தை வீழ்த்தி விட்டார்களோ?



தத்தளித்துக் கொண்டிருந்த விமானம் -
எங்கே பார்த்தாலும் யுத்தத்தின் நிழல்! எக்கச் சக்கமான சேதம்! எங்களால் எவ்வளவு நேரம் பறந்து கொண்டிருக்க முடியுமென்பது தெரியாது! குவாலோண்டா நோக்கிப் பறந்து கொண்டேயிருக்கிறோம்! உங்கள் குரல் தெளிவில்லாமல் கேட்கிறது!




சார்லியிடமிருந்து தலைமையகத்திற்கு... நீங்கள் சொன்ன சிறிய விமானத்தை கண்டு பிடித்து விட்டேன்.
அவர்கள் இருக்குமிடம் மவோபே 350க்கு நேர் மேலே! ஆனால் அவர்களை பின் தொடர்ந்து சென்றால் பெட்ரோல் தீர்ந்து சிக்கலில் மாட்டிக் கொள்ளும் அபாயம் உண்டு.
ஆகையால் நாங்கள் அப்படியே திரும்பி வருகிறோம்!




விஷயம் தெரியுமில்லையா ?
கிழக்கிலுள்ள வெள்ளி பிராந்தியம் ! --பார்னே நீ சொன்னது சரியாகி விட்டது. அந்த விமானம் இனி நொறுங்கி விட்டால் கூட தேவலே! .


ஓ.யெஸ்! வெள்ளைப் பிராந்தியத்தினுள் யாரும் நுழையக் கூடாதென உத்தரவு உள்ளது - காரணமாகத்தான்! கர்னல் - நமது விஞ்ஞானிகள் இந்தப் பகுதியைப் பற்றி என்ன குறிப்பு கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா?
நாம் எவ்வகையில் உதவப் போகிறோம்!
அந்த எண்ணம் இல்லை.... அவர்களைக் காப்பாற்றுவதென்றால் ஒரு புல்டோசர் அனுப்ப வேண்டும். ஒரு நகரம் மொத்தத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றும் பொறுப்பு இப்போது நமக்கு உள்ளது.... ஏயானை மறந்து விடலாம் கர்னல்!
அந்த முள் காட்டிலிருந்து யாருமே உயிரோடு தப்பிக்க முடியாது!
நிஜம் அதுவாக இருந்தாலும் என்னால் ஏனோ ஏற்றுக் கொள்ள முடியவில்லை.



அதே சமயம்
பாப்... என்ஜின் திணறுகிறதே!
எதிர்பார்த்ததுதான் - எல்லாமே திட்டப்படிதான் நடந்து வருகிறது.
பெட்ரோல் தீர்ந்து போகிறதோ!
ஆமாம்... தரையிறங்க சீக்கிரமே ஒரு நல்ல இடம் கிடைக்க வேண்டுமே
ட்யூப்பில் உள்ள ஒவ்வொரு துளியையும் பயன்படுத்த விமானத்தை அப்படியும் இப்படியும் ஆட்ச் செய்யப் போகிறேன் இறுக கட்டிக் கொள்ளுங்கள்.


பாப்..! அதோ.. ஒரு ரோடு -
ஆனால் நிறைய வளைவுகள் இருக்கின்றன...
ஆனால் நமக்கு வேறு வழியில்லை..
?!
?!
அந்த ரோட்டில் எமன் எதிரிகளின் டாங்கி வடிவத்தில் காத்திருந்தான்!



குனிந்து கொள்ளுங்கள்!
பாப்... நம்மை சுட்டு விடுவார்கள் போலிருக்கிறதே
தைரியமாக இரு... நாம் அவர்களிடம் மாட்டிக் கொள்ளப் போவதில்லை
ரட்டட்ட ரட் டட்
இன்னும்.. இன்னும் கொஞ்ச நேரம் தாக்குப்பிடி... குபிலே!
ரட் டட்
ஆங்..! சமர்த்து... இன்னும் ரெண்டு நிமிஷம் போதும்
எதிரே... என்ன அது... ஒன்றுமே தெளிவாக தெரியவில்லையே
வேறு வழியில்லை... காங்கப் பகுதியை ஊடுருவிக் கொண்டு தரையிறங்கப் போகிறோம்... ஜாக்கிரதை!
ராட்சஸ முள் குவியலினுள் விமானம் பாய்ந்து கொண்டிருந்த அதே வேளையில் - நெஞ்சில் ஈரமும் துணிவும் கொண்ட மூன்று ஆசாமிகள் அவர்களைக் காப்பாற்றும் பணியில் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்!


பார்னே... அந்த முள்காட்டில் முன்பு மாட்டிக் கொண்ட போது ஏற்பட்ட அனுபவத்தை சொல்லேன் - கேட்போம்!
அதனால்தான் தனியா போறேன்னு சொன்னேன்.. ஆனா... இன்னும் ஒண்ணு ரெண்டு பேருக்கும் உயிர் மேலே ஆசையில்லை போலிருக்கு - கூடவே கிளம்பியாச்சு!
வெளியேற முழுசாக மூன்று நாட்கள் பிடித்தது.... ஏழு பேராக கிளம்பிய நாங்கள் அதற்குள் ரெண்டு பேராகிப் போனோம். அந்த இன்னொரு ஆசாமியின் ஒரு கையை அடுத்த 48 மணி நேரத்திற்குள்ளாகவே வெட்டி எடுக்க வேண்டியதாயிற்று. அதனால்தான் சொல்லுகிறேன் - அற்புதம் நிகழும் என்ற உத்தரவாதம் இல்லை என்று!
அதற்கில்லை பார்னே... விமானத்திலே ரெண்டு குழந்தைகள் இருக்கிறதாம்..
LOMBASHI
AIRPORT
...அதுகள் உன்னை காட்டுப் பகுதியில் தனியாக பார்த்தால் பயந்துவிடக் கூடுமில்லையா - அதான்! ஆனால் ரயான் குவலோண்டா பகுதியில்தான் தரையிறங்கியிருக்கிறார் என்ற செய்தி இன்னமும் உறுதி செய்யப்படவில்லை!


ஆமு... என்னோட ஆறாவது அறிவு மீது ஆணையா சொல்றேன்... இப்படி உயிருக்கு உத்திரவாதம் இல்லாத பயணத்தை நான் மேற்கொள்கிற போதெல்லாம் யாரோ அதை உசுப்பிவிடப் பட்ட் மாதிரி குய்யோ முறையோன்னு ஓலமிடும்... இந்தத் தடவையும் அந்த உணர்வு எழுகிறது!



கர்னல்... அந்த சிறிய் விமானம் இருக்குமிடம் துல்லியமாக தெரிந்து விட்டது... ஆனால் மேஜர் கெஹானி ஸ்பெஷல் நடவடிக்கை எடுக்க இன்னமும் சம்மதம் தரவில்லை.
கெஹானியை குழியில் போடு! லெப்டினென்ட் பார்னேயும், பிரின்ஸும் வலிய முன் வந்திருக்கிறார்கள்... எங்கே நிற்கிறது ஸ்பெஷல் விமானம்!
இந்தப் பக்கம்!
நடங்கள்... போவோம்!
உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நடவடிக்கையை மேற்கொள்ள மாட்டேன் என்பவர்கள் எல்லாம் ஏன்தான் இராணுவத்திற்கு வந்தார்களோ?...
...பேசாமல் மதபோதகர்களாக போயிருக்கலாம்!
நாங்கள் கேட்ட விசேஷ உபகரணங்கள் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் வந்து சேர்ந்து விட்டதா?


பார்த்து விடுவோம்!
ஒன்று இல்லாமல் போனாலும் தொலைந்தோம்!
மெத்தை இன்னும் கொஞ்சம் தடிமனாக இருந்திருக்கலாம்... ம்ம்... சமாளித்துக் கொள்வோம்!
எல்லாம் ரெடி.... கர்னல் - நாங்கள் கிளம்புகிறோம்!
இங்கே புரட்சியாளர்களை சமாளிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது பார்னே... இல்லையேல் நானும் உங்களோடு வந்து விடுவேன்... ஜாக்கிரதையாக போய் வாருங்கள்... வந்த பிறகு உங்கள் அனுபவங்களை கட்டாயம் எனக்குச் சொல்ல வேண்டும் குட் லக்!
தொழிலில் அவருக்கு அது நிறைய தேவைதான்... நாமும் கூட நம் திறமை மீது வைத்துள்ள நம்பிக்கையினால்தானே இப்படி துணிச்சலாக கிளம்பி இருக்கிறோம்!
"வந்த பிறகு" என்று எவ்வளவு நம்பிக்கையோடு வாழ்த்தி அனுப்புகிறார் பார்த்தாயா!


அங்கே முள் காட்டில் -
பாப்... விடிந்து கொண்டு வருகிறது... உங்களுக்கு ஒன்றுமில்லையே
நான் நலமாகத்தான் இருக்கிறேன். நாம் எல்லோரும் இன்னமும் உயிரோடு இருக்கிறதைத்தான் என்னால் நம்ப முடியவில்லை.
பத்திரமாக தரையிறங்கி அட்டகாசம் பண்ணி விட்டீர்கள் - ஹீரோ
அவர்களைப் பார் ஒன்றுமே நடவாதது போல் எவ்வளவு அமைதியாக துயில்கிறார்கள் என்று!
இரவில் விமானத்தை விட்டு நாம் வெளியேறாதது
எவ்வளவு புத்திசாலித் தனமானது என்று புரிகிறது இப்போது!
கண்ணில் தெரியும் காட்சி ரசிக்கும்படியாக இல்லை. படுபயங்கர முட்செடிகள்... உடலை பதம் பார்த்துவிடக் கூடும்.
உயிருக்கே உத்தரவாதம் இல்லாதிருந்த சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது எவ்வளவோ தேவலாம் - இல்லையா!


சற்றுத் தொலைவில் தெரியும் பழங்கள் செர்ரியாக இருக்குமோ? காலை சிற்றுண்டிக்கு ஏதாவது சேகரித்து வர முடியுமா பார்க்கிறேன்!
அதென்ன இரைச்சல்...
ரேடியோவை முடுக்கு... மிரியம்!
புரட்சியாளர்களாக இருந்து விட்டால்... தெய்வமே!
இரு... ஓரிரு விநாடிகளில் நிஜம் தெரிந்து விடும்
ஹலோ... ஹலோ... பார்னே பேசுகிறேன்! ரயான்... ஹலோ... ராயன்? அங்கிருந்து ஒரு இஞ்ச் கூட நகராதீர்கள். எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் உங்களை சமாதிக்கு இட்டுச் சென்று விடும்... சில கிலோமீட்டர் தொலைவுக்கு மரணம்தான் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது!.. வெளியில் உள்ள எதையும் தொட வேண்டாம்!



மரணத்தின் ஆதிக்கம்? இங்கே எப்படி...? இப்படி அசரீரியாக வரும் தேவ வாக்கின் சொந்தக்காரர் எங்கே?
ஓ... அதோ - மிரியம்... அந்த பைனுக்குலரை எடுத்து இப்படிக் கொடு!
நமக்கு உதவ வந்திருக்கிறார்கள் போலும்... ஆனால் அது எப்படி சாத்தியம்? ஆபத்து எங்களை சுற்றி சூழ்ந்திருப்பதாக குறிப்பிட்டார்கள் -அது எதை வைத்து...
வட்ட மடிக்கத் தொடங்கி விட்டது.
அரசாங்க விமானம்... எனவே, நண்பனைத் தானிருக்கும்!
ரேடியோவில் கடா முடா சப்தம் தான் வருகிறது... தெளிவாக எதையுமே கேட்க முடியவில்லை.


?
அந்த செடிகளில் உள்ள முட்கள் விஷத்தன்மை உடையவை - லேசாக உடம்பில் கீறினால் போதும் இருபதாவது வினாடியில் மரணம் நிச்சயம்... ஆபத்து புரிகிறதா... ரயான்?
N600
சரி.. இனி அடுத்த கட்ட நடவடிக்கையை கவனிப்போம்!



ஊஹூம்... கூடாது... யாரும் தரையில் கால் வைக்கக் கூடாது! நம்மைத் தேடி, உதவி செய்ய வந்திருக்கிறார்கள். அவர்களுடைய எச்சரிக்கையை அலட்சியம் செய்யக் கூடாது!
அவங்க பாரசூட்டை கட்டிக்கிட்டு குதிக்கப் போறாங்க.. அதை நான் வேடிக்கை பார்க்கணும்!
இங்கிருந்தே அதை பார்க்கலாம்! நமக்கு சாப்பிட என்ன கொண்டு வந்திருப்பாங்கன்னு எங்கே சரியா யோசித்து சொல் பார்க்கலாம்?
அவைகள் எல்லாம் முட்களா?
ஆமாம்.... கடுமையான விஷம் உள்ளவை... மிரியம்! அவர்கள் நம் அருகே தரையிறங்க வாய்ப்பே இல்லையே...
பின்னே எப்படி -
அதோ.. குதிக்கிறார்கள்



பாரசூட்டில் இருப்பது மனிதர்களல்ல! ஏதோ.. வித்தியாசமான ஒரு பார்சல்.
குபுக்!
உஸ்ஸ்ஸ்


அந்த சாதனம் கன கச்சிதமாக வேலை செய்கிறது... அடேங்கப்பா... இங்கிருந்து பார்த்தால் சின்னப்புள்ள மாதிரியில்லே தெரியுது!
சர்க்கஸில் கோமாளி உயர இருந்து ஒரு சிறிய குதிருக்குள்ளே பாய்ந்த போது எப்படி விழுந்து விழுந்து சிரித்தோம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்...
இம்மாதிரி காற்றடைத்த சாதனங்களை கடலில் இறங்க பயன்படுத்துவது வழக்கம்.
முட்கள் அதை கிழித்து சேதப்படுத்தி விடாதோ?



விடலாம்தான் .! என்னால் இதை நம்பவே முடியவில்லை!
நம் கண்ணெதிரே உயிரை போக்கிக் கொள்ளப் போகிறார்கள் அந்த அப்பாவி மனிதர்கள்.. பாப்!
குதிப்போமா..? கடைசியா ஏதாவது சொல்ல நெனைச்சேன்னா இப்பவே சொல்லி விடு..!
முடியவில்லை அப்பனே... பல் பயத்தில் அடித்துக் கொள்கிறது... கடவுளே எனக்கு துணிவைக் கொடு!


நம்மோட குடைகள் விரிஞ்சாச்சி... கீழே தெரிகிற சின்னஞ்சிறு கூட்டல் கூறியை தவிர வேற நெனைப்பு எதுவும் வரக் கூடாது இப்போ!
இலக்கை கச்சிதமா போய்ச் சேருகிற பந்தயம்... இது.. சவால்தான்... எப்படியாவது ஜெயிச்சாகணும்...
கூட்டல் குறி... வர வர பெரிசா தெரியுது...
பார்னே கச்சிதமாக இலக்கை நோக்கி இறங்கிக் கொண்டிருக்கிறான்... ஆனால் என்னால் முடியுமா... எனக்கு ஏன் இப்படியொரு அவநம்பிக்கை...


பார்னே... சாதித்து விட்டான்!
ஓ.. தெய்வமே... நான் இலக்கிலிருந்து விலகிப் போகிறேனே


முட்கள்..! நேராக முட்புதருக்குள் விழப் போகிறேன்...
செத்தேன்.. இத்தோடு!
ஏதாவது வித்தியாசமாக செய்தால்தான் உண்டு...
அடேய்... பிரின்ஸ் - ஜீவ மரண பிரச்சனையடா இது...


குடல் மொத்தமும் தொண்டைக்கு வந்தாச்சு... நான் பிழைச்சதே மறு பிழைப்புத்தான்!
தொப்
அடேயப்பா.. என்ன ஒரு சாகஸம்.. மயிர்க் கூச்செறிகிறது
திறமை என்று சொல்ல மாட்டேன்.. தெய்வாதீனம் என்பதுதான் சரி... நூற்றில் ஒரு வாய்ப்பு... - முட்களை தவிர்த்து எப்படித்தான் அவர்களால் அந்த திண்டை விட்டு வெளியே வர முடியுமோ தெரியவில்லை!
ஹலோ... பைலட்! உங்களுக்கு உதவ வந்திருக்கிறோம்..
மிக்க நன்றி! நாங்கள் என்ன செய்ய வேண்டும்.. சொல்லுங்கள்.



உங்கள்ள மீட்க தேவையான உபகரணங்களை கொண்டு வந்தோம்... ஆனால் ஒரு பார்சலை காணோம்... எங்கே விழுந்ததோ கண்டு பிடித்துச் சொல்லுங்களேன்
ஏதோ ஒன்று... ரொம்ப கனமானது.. அங்கே விழுந்ததை நான் பார்த்தேன்,
அதை தூக்கிப் போட்ட ஆசாமி எங்களை கிண்டலடிக்க, வேணும்னே அப்படி செய்திருப்பானோ?
கடவுளே.. இங்கிருந்து நூறு மீட்டர் தொலைவில் அல்லவா கிடக்கிறது... விஷமுள் காட்டை எப்படி ஊடுருவி போறது? உயிருக்கு உத்தரவாதம் இல்லாத சங்கதி... முடியும்னு தோணலை!
ஆமு... அது நமக்கு அவசியம் வேணுமே... ம்ம்... இப்படி செய்தால் என்ன?
ரயான்! ஸ்குரு டிரைவர் கைவசம் இருக்கிறதல்லவா... உங்க விமானத்திலேர்ந்து ரெண்டு ஸீட்டை கழற்றி எடுத்து இந்தப் பக்கமா கடாசப்பா!
கிறுக்கனே!


நிச்சயமாக இல்லை! ஒரு மணி நேரத்திற்கு முன் நாம் அநாதைகள்... ஆனால் இப்போது இரண்டு சாகஸ வீரர்கள் சாதித்தே தீருவது என்ற தீர்மானத்தோடு இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் வாழ்க... அவர்களுடைய ஆணைப்படி நடப்பதே விவேகம்! ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால்தான் நாம் உயிர் பிழைக்கலாம் என்று நினைத்தோம். அந்த அற்புதத்தை நிகழ்த்தப் போகிறார்கள் இவர்கள்!
ஓ.கே.. இந்தப் பக்கமாக முடிந்த வரை பிரின்ஸுக்கு பக்கமாக தூக்கிப் போடு!
போறாது..! ஆனாலும் பாதை இருக்கிறது.. நீ போகிறாயா?
போகிறேன்! ஆனால் கிறுக்குத்தனமான யோசனை... உன்னுடையது!


தொப்!
கரணம் தப்பினால் மரணம்தான்!
ம்ம்... அப்படித்தான் - ஒவ்வொரு சோபாவாக மாற்றி மாற்றி எடுத்து வைத்து போ!
மோசமில்லை..!


சோபாக்களில் முட்கள் குத்திக் குத்தி பின் குஷன் மாதிரி ஆகிவிடப் போகின்றன.
கைகளில் இரப்பர் உறை இருப்பது ஒரு பாதுகாப்பு அம்சம்!
அவர் என்னதான் செய்கிறார்?
ஒவ்வொரு சோபாவாக நகர்த்தி அந்த பார்சலை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்!
ஆனால் எப்படி திரும்பி வருவார் - கனமான அந்த பார்சலோடு?


இல்லை... வேறு ஏதாவது உபாயம் இருக்கும்! ஒவ்வொன்றையும் திட்டமிட்டுத்தான் செய்து வருகிறார்கள்!
அலுப்பூட்டும் சங்கதி! ஆனாலும் நான் சோர்ந்து விடக்கூடாது!
பிரின்ஸ் என்ன ஆச்சு...? போரடிக்குதா...?.வேகம் குறைஞ்சிட்டுதே! கஷ்டம்தான்.. என்ன பண்றது! பொண்ணுகள் வேடிக்கை பார்த்துக் கிட்டிருக்கிறதுகள்... அதை ஞாபகம் வச்சுக்கிட்டு கொஞ்சம் உற்சாகமாக காரியம் பண்ணு!
ஒரு வழியாக வந்து சேர்ந்து விட்டேன்... உபகரணங்கள் எல்லாம் சேதம் இல்லாமல் உருப்படியாக இருக்குமா?
ஹாய்ய்... பார்னே! நாம் இப்போது ஜெயித்து விட்ட மாதிரிதான்!


மறுகணம்
இங்கே பார் -
க்ராக்!
சர்ர்ர்ர்



நாங்கள் இருக்கிற இடம் வரை இப்படி சுட்டுப் பொசுக்கி பாதை உருவாக்கப் போகிறாயா?
இல்லை... முள் செடி அடர்த்தியாக இருந்தால் மட்டும்தான்
முட்செடிகள் குட்டையாக உள்ள இடங்களை கடக்க இந்த யுக்தி போதும்!
வாஸ்தவம் தான்! சக்தியைஎப்போதும் விரயம் செய்யக் கூடாது!
வழி முழுக்க நமக்கு இந்தக் கருவி தேவைப்படும். எரிபொருளை வீணாக்க முடியாது!



என்னால் முடியாது. சுத்த பைத்தியக் காரத்தனம் இது
பைத்தியம் மாதிரி பேசாதே - குழந்தைகளை பார்!
அவர்களுக்கு இது ஒரு விளையாட்டு! மரண பயம் உன்னை கலவரப் படுத்தி யிருக்கிறது... துணிச்சலை வரவழைத்துக் கொள். உற்சாகமாக கிளம்பி விடுவாய்.
கீழே விழுந்து விடுவேன் - நிச்சயம் விழுந்து விடுவேன்!
பெரியவர்களுக்கு பயிற்சி இல்லை என்றால் சற்று கஷ்டம்தான்
வழியில் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்! வேற வழி?


துணிச்சலா, நம்பிக்கையோடு பண்ண வேண்டிய காரியம் இது... தப்புக்கு மன்னிப்பே கிடையாது!
தைரியம் சொல்கிறாயா... இல்லை பயமுறுத்துகிறாயா?
இதோ பாருப்பா ரயான்! சர்க்கஸில் கம்பி மேலே நடப்பது போன்ற சமாச்சாரம் இது! கரணம் தப்பினால் மரணம்! மனசைக் குழப்பிக்காம கட்டைகளில் ஏறிக் கொண்டு புறப்படும் வழியைப் பாருங்க! போலாமா?
மோபோக்கு கிழக்கே உள்ள அந்த வெள்ளை பிராந்தியத்தை ஊடுருவிச் செல்வதை பறவைகள் கூட தவிர்ப்பதுண்டு! அங்கே அந்தக் குழு அன்று மேற்கொண்ட பயணம் - ஒரு கண் கொள்ளாக் காட்சிதான்!


நிதானமாக, மிகுந்த விழிப்போடு அவ்வப்போது ஓரிரு வார்த்தைகளை மட்டும் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டு ஒரே அணி வகுப்பாக அந்தக் குழு உயிரைக் குடிக்கத் துடிக்கும் அந்த பாவ பூமியை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது...
கழிந்த ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாகத் தெரிந்தது அவர்களுக்கு... உடல் வலி, மன வேதனை... அப்பப்பா... முடிவில் உயிர் தப்பிப்போமா என்ற சந்தேகம் வேறு...
...அந்த நரகத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டது அவர்களுடைய் தலை எழுத்து... அல்லது விதிவசத்தால் என்று வைத்துக் கொண்டால் பிரின்ஸ், பார்னே ஜோடிக்கு ஏன் இந்த வேண்டாத வேலை?
கல்லுக்குள் ஈரம் என்பது போல் பார்னேயின் கரடு முரடான தோற்றத்திலுள்ளே இப்படியொரு மனிதாபிமானம் மிக்க நல்லிதயமா?
ய்ய்...
ய்ய்...
ய்ய்....


சனியன் பிடித்த கொசுக்கள்... என்னை வெறி கொள்ளச் செய்கின்றன.
ஹே.. ஜாக்கிரதை!
ஐ..யோ! செத்தேன்!
பொத்
கெடுத்தியே காரியத்தை!
நல்ல வேளை... நாம் விழுந்த இடத்தில் முட்கள் இல்லை... நாம் தப்பியது தெய்வாதீனமான செயல்தான்... போ!
வலி... பிராணன் போகிறது..
என்னால்... தாக்குப் பிடிக்க முடியவில்லை...
முள் கிழித்து விட்டதா என்ன?
இல்லை! மயிரிழையில் தப்பி விட்டோம்! எங்கேயாவது சற்று ஓய்வெடுத்தால் தேவலாம்! இந்த பெண்கள் பாவம்... துவண்டு போய் விட்டார்கள்... எனக்கும் 'தம்' அடிக்கணும்!
ஒதுங்க எங்கேயாவது இடம் இருக்கிறதா என்று பார்ப்போம்..!


அதோ ஒரு மரம்.. —அதனடியில் முட்செடிகளே இல்லை! ஓய்வெடுக்க அருமையான இடம்!
அங்கங்கே அப்படியே நில்லுங்கள்...
மரத்தடியை சென்றடைய பாதை உருவாக்குகிறேன்!
புஸ்ஸ்ஸ்
ஹாய்ய்... பாதை ரெடி!
வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன்! அந்த மரத்தில் ஏறி கிளையில் சாய்ந்து கொண்டு விட்டேனானால் அப்புறம் சொர்க்கமே எனக்கு சொந்தமாகி விடும்!


நாம் அனைவரும் மரத்தின் மேலே ஏறிக் கொண்டு விடலாம்... முதலில் மிஸஸ் ரயான்... ரெடி?
ஆவ்... பிரின்ஸ் - என்னை கீழே இறக்கி விடுங்கள் - சீக்கிரம்!
க்ர்ர்ர்ர்!
பார்லே... அங்கே பார்
முதல் தோட்டா தெற்றிப் பொட்டில் பாய்ந்தால்தான் பிழைத்தோம்.




என் குறி-தப்பிவிட்டது..
நிச்சயமாக எனக்குத் தெரியும்...
இன்னொரு துப்பாக்கி முழக்கம் கேட்டது! எதிரிகள்தான் சுட்டிருக்கக் கூடும்... கடவுளே!
எப்படிப்பட்டதொரு ஆபத்திலிருந்து நாம் தப்பித்திருக்கிறோம் என்பதற்கு இந்த விலங்கே சாட்சி!
இந்த விலங்கு இவ்வளவு தூரம் வந்து விட்டிருக்கிறது எனி... இந்த முள் காட்டின் விளிம்பு வெகு அருகாமையில்தான் இருக்க வேண்டும்! ஓ - நான் காண்பது... நிஜம்தானு!
காட்டின் விளிம்பு தெரிகிறதா என்ன?
ஆமாம்... அத்தோடு முப்பது பேர்.. ஏகப்பட்ட ஆயுதங்களோடு...
வடாங்கோக்களா?
ஆமாம்... நன்றாக ஊற்றிக் கொண்டு வெறி ஏறிய நிலையில்...
நாம் திரும்பி போகவும் முடியாது... இங்கே தாமதிக்கவும் முடியாது... பேசாமல் சரணடைந்து விடலாம்... உயிர் பிழைக்க நாம் வேறு என்ன செய்ய முடியும்?



பேதைப் பெண்ணே... எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டாய்
குழந்தைகளையாவது நாம் காப்பாற்றியாக வேண்டும்... அதற்கு ஒரு உபாயத்தை நாம் கண்டறியணும்!
முப்பது பேர்... சண்டை போட ஆயுதங்களோடு தயாராக வரவில்லை நாங்கள்... ஏதாவது தந்திரம் செய்தால்தான் உண்டு.
பிரின்ஸ்.. என்ன செய்யலாம் - சொல்
முதலில் குழந்தைகளை ஒதுக்குப்புறமாக அனுப்பிவிட வேண்டும்... அப்புறம் - எனக்குத் தேவை... நெஞ்சுரம் மிக்க தூண்டில் புழு... அதாவது அவர்களை கவர்ந்து இழுக்க!
?
என்னைத்தான் மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள் - இல்லையா? நான் ரெடி!
பிரின்ஸ்.. உன் திட்டம்தான் என்ன?
எனக்கு புரிந்து விட்டது! எனக்கு நம்பிக்கை இருக்கிறது பாப்! பிழைத்தால் எல்லோரும் பிழைப்போம்... இல்லையேல், ஒட்டு மொத்தமாக அழிவோம்.. பிரின்ஸின் ஆணைக்கு நாம் அனைவரும் கீழ்ப்படிவோம்!
சீக்கிரம்...! இல்லையேல், சிறுத்தையை அங்கிருந்தே வீழ்த்த முடிந்த அவர்களுக்கு நம்மை குறி வைப்பதில் சிரமமே இராது!


யார் என்ன செய்ய வேண்டும் என்று அவசரமாக விளக்கப்பட்டது... ஆயுதம் தாங்கிய ஆண்கள் பரவலாகி பதுங்கிக் கொண்டு விட்டனர்... அந்த சூழலுக்கு தகுதியற்றவர்கள் பத்திரமான இடத்துக்கு போய் விட்டனர்...
நெஞ்சுறுதி படைத்த நபர் துணிச்சலாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு முன் வந்தாள்..
பலி ஆடு..
...அல்லது...


தூண்டில் புழு!
எலி ஒழிப்பு போராட்டம் தொடங்கட்டும்! வெற்றி முழுசாக் சாதிக்கப்படும் வரை ஒயக்கூடாது!
பயந்து ஒடுவாங்கன்னு நெனைச்சேனே... ஆண்டவனே... எப்படி தாக்குப் பிடிக்கப் போறோமோ - தெரியலியே


மிரியம்... உனக்கு காயம்.. -
ரயான்.. படுத்துக்கோ!
டுமீல்!
டுமீல்
டுமீல்
இன்னொரு மூணு நிமிஷம்! மூணு நிமிஷம் நான் உயிரோட இருந்தேன்னு இந்தச் சண்டாளர்களை குழந்தைகள் இருக்கிற இடம் வரை போக விடாம பண்ணிடுவேன்.
ஓ... ஆண்டவனே... என்னோட பிரார்த்தனை உனக்கு கேட்கிறதா.. ஹே.. வானத்திலே..
ஆண்டவன் கருணை மிக்கவர்தான்... இத்தனை களேபரத்தையும் மிஞ்சி எஞ்சினின் இரைச்சல் வந்து காதில் தேனைக பாயுது.


நிஜம்தானா...? இந்தக் காட்சி... சினிமாவில் உச்ச கட்டத்தில் வருகிற திடீர் மாற்றம் மாதிரி..
ஆமாம்,... உங்களை அந்த சைத்தான் காட்டில் இறக்கிவிட்டுச் சென்ற பிறகு அப்படியே அந்த விஷயத்தை நான் அடியோடு மறந்து விடவில்லை.
..அப்படியானால்.. புரட்சி?







பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், தபால் பெட்டி எண்: 374, சிவகாசி - 626 123. போன்: 20649
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு நிர்: 107


அது ஏன்பா -குதிரைக்கு கால் ஒடைஞ்சி போச்சுன்னா -சுட்டுக் கொன்னூடு றாங்க?
நடக்க முடியாத குதிரையை வைத்து என்ன பிரயோஜனம்?
ஏய் கரடி! கால் ஒடைஞ் சிட்டா கூட உன்னை மாதிரி இரண்டு காலால் நடக்கிறது எப்படின்னு எனக்கு கத்து தா்றியா?
ஓ... தாராளமாய் கத்து தா்றேன்!
ஆனால் ஒடைஞ்சி போறது உன்னோட பின்னங்காலா இருந்தா என்ன செய்வியாம்?
ஸ்ஸ்... தம்பி... ஒரு நிமிஷம் உன்னோட பேசலாமா?

# கதை சொல்லும் படங்கள் - 5

S. விஜயன்



காமிக்ஸிற்கு கதை தேர்ந்தெடுப்பது எப்படி என்று இந்தப் பகுதியில் எழுதப் போகிறேன்:

ஒரு காமிக்ஸின் வெற்றியோ - தோல்வியோ நிர்ணயிக்கப்படுவது அதன் கதையம்சத்தைப் பொருத்தே! பார்த்தவுடன் கண்ணில்படுவதால் சித்திரங்களின் தரத்தை எளிதில் எடை போட்டுவிட முடியும் - ஆனால் எளிதில் புலப்படாத கதையினை எடைபோட எல்லோராலும் முடிவதில்லை. (அதாவது வாசகர்களைத் தவிர்த்து). சுமாரான சித்திரங்களைக் கொண்டதொரு காமிக்ஸ் கூட நல்ல கதையிருந்தால் வெற்றி பெற முடியும் (உதாரணம் - கேப்டன் பிரின்ஸ் கதைகள்). ஆனால் மோசமான கதையை எவ்வளவுதான் அருமையாக வரைந்து கொடுத்தாலும் கூட போணியாகாது. (உதாரணம்: ராணி காமிக்ஸின் ஜேம்ஸ்பாண்ட்)

நல்லதொரு கதையை உருவாக்க முதலில் ஒரு நல்ல theme தேவை! உதாரணத்திற்கு இம்மாத (பிரின்ஸ் in ஆப்பிரிக்கா) கதையின் theme - மனிதாபிமானம்! முள்காட்டில் சிக்கிய குடும்பத்தை அதிகாரிகளே கைகழுவி விட்ட பின்னரும், பார்னே & பிரின்ஸ் மனிதாபிமானத்தோடு காப்பாற்ற முன்வருவதே மையக் கருத்து!

முதலில் உங்கள் கதைக்கு இது போன்றதொரு மையத்தை தயார் படுத்திக் கொள்ளுங்கள், (ஹீரோ - ஹீரோயின்கள் பற்றி முதலிலேயே முடிவெடுத்திருக்க வேண்டும்) அடுத்ததாக கதையோட்டத்தை தீர்மானம் பண்ணியாக வேண்டும்! அதாவது - கதையில் நடைபெறும் சம்பவங்கள், அடிதடிகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை தெளிவாக outline பண்ணிக் கொள்ள வேண்டும்.

கதையை கொஞ்சம் கொஞ்சமாக சொல்ல ஆரம்பிக்கும்போது வாசகர்கள்,

கதாநாயகர்களோடு ஒன்றிப் போக முடிந்தால் வெற்றி நிச்சயம்! அதற்கு கதையின் பின்னணியினை தெளிவாக விளக்குவது முக்கியம்! உதாரணத்திற்கு இரண்டாவது உலக யுத்தக் கதை என்றால் - யுத்தத்தைப் பற்றி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சூழலைப் பற்றி வாசகர்களை பரிச்சயப்படுத்தியாக வேண்டும்! கதையின் வெற்றிக்கு இது முக்கிய அம்சம்!

அடுத்த கட்டமாக கதாபாத்திரங்களில் நல்லவர்கள் - வில்லன்கள் - ஆகியோரின் identity ஐ தெளிவுபடுத்திட வேண்டும்! கதாபாத்திரங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு யதார்த்தமாக அமைகின்றனவோ - அவ்வளவுக்கு அவ்வளவு கதை வெற்றி பெற வாய்ப்பு உள்ளது! இதற்கு அருமையான உதாரணம் நமது பிரின்ஸ் குழுவினர்! இந்த அணியில் யாருமே சினிமாத்தனமான ஹீரோ கிடையாது! பிரின்ஸ் ஒரு ஒல்லியான கப்பல் கேப்டன்; பார்னேயோ வயதான, முரட்டு மாலுமி! அவ்வளவுதான்! இவர்களோடு நாம் எளிதில் ஒன்றிப் போய்விட முடிவதற்கு இவர்களது எளிமையே காரணம்!



கதையைத் தேர்ந்தெடுக்கும் முன்பு இன்னுமொரு முக்கிய விஷயத்தைக் கவனித்தாக வேண்டும்! கதாசிரியருக்கும் சரி; வாசகர்களுக்கும் சரி; ஓரளவிற்காவது தெரிந்த சூழலில் கதையினை உருவாக்குவது நல்லது. ஒரு உதாரணம் சொல்லுகிறேன்:

யுத்தப் பின்னணியில் ஒரு கதையை உருவாக்க வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் - உங்களுக்குத் தெரிந்த இந்தியா - பாகிஸ்தான் யுத்தத்தைப் பற்றியோ - இந்தியா - சீனா யுத்தத்தைப் பற்றியோ எழுதுவது தான் நல்லது! கொஞ்சமும் தெரியாத இங்கிலாந்து - அர்ஜென்டினா யுத்தத்தைப் பற்றி எழுத ஆரம்பித்தால் நிச்சயம் கதை சோபிக்காது! மின்னல் படையினரின் உலகப் போர் கதைகள் சிறப்பாக அமைகின்றன என்றால் - அதற்குக் காரணம் - கதாசிரியரும், ஆர்ட்டிஸ்டும் இங்கிலாந்துக்காரர்கள் என்பதால்! யுத்தத்தின் கொடூரத்தை நேரில் அனுபவித்த அவர்களால் அதை வெற்றிகரமாக வெளிக்கொண்டு வர முடிகிறது!



அடுத்த இதழில் ஒரு model story

தொடரும்


ஜூனியர் & சீனியர்!
கதை : S. விஜயன் ☆☆ சித்திரம் : சிகாமணி
ஐயோ... அம்மா...! என் தலை எப்படியோ முழுசா திரும்பிட்டது...! நான் இப்போ பின்பக்கமாய் பார்க்கிறேன்!
இதோ - என் சட்டை காலரில் உள்ள லேபிளைக் கூட வாசிக்க முடியுது!
ஒரு நிமிஷம் - என்னோட தொப்புள் இதோ இருக்கே - அப்படீன்னா சட்டையைதான் புரட்டிப் போட்டிருக்கிறேனு?
ஒன்னும் பிரச்சனையில்லை பிரதர்...! என் தலையிலே எந்தக் கோளாறும் இல்லை!
அதை நீ சொல்லக் கூடாது - நான் சொல்லணும்!

# வாசகர் கடிதம்



- **K. *ராஜகுமார், வலையபட்டி.***

"பச்சை வனப் பாவை" அட்டைப்படம் டாப் டக்கர்! மாடஸ்டி & கார்வின் சாகஸம் ஆங்கிலப் படம் பார்த்த திருப்தியளித்தது! ஆர்ச்சி கதைகளைப் பெரிசாகப் போடுங்கள்! குட்டிக் கதைகள் வேண்டாம்!

- **S. *திருவரங்கன், தெற்கு ஒட்டங்காடு***

"ரெளடி ஆர்ச்சி" கதை அருமை. "பிரின்ஸ் in ஆப்பிரிக்கா" சீக்கிரம் வெளியிடுங்கள்!

- **M. *அருள், காட்டுமன்னார்கோவில்.***

பச்சை வனப் பாவையும், ரெளடி ஆர்ச்சியும் ஏனோ அவ்வளவு விறுவிறுப்பாக இல்லை. அட்டைப்படம் சூப்பர்! **ஜூனியர் and சீனியர்** செம - சிரிப்பு. இரண்டு பெரிய கதைகளையும் இது தூக்கி விட்டது. "**கதை சொல்லும் படங்கள்**" தொடர வேண்டும்.

- **L. *வெங்கடேசன், C. அய்யம்பாளையம்.***

"கதை சொல்லும் படங்கள்" கட்டுரையில் ஒரு காமிக்ஸ் உருவாவதில் இத்தனை வேலைகள் உள்ளனவா என வியக்க வைத்தது!

- **E.R.B. *சற்குணர், சென்னை - 75.***

மாடஸ்டியின் சாகஸம் அபாரம். கோட்டையினுள் நடக்கும் சமயோசித்த சண்டை திகைக்க வைத்தது! கதை சொல்லும் படங்கள் கட்டுரை தொடர் அருமை.

விரைவில் வருகின்றன!



சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லர்
தோன்றும்
பாலைவனப் பரலோகம்!
லயன் காமிக்ஸ்
ரூ. 6.00




மிஸ்டர் ஜெட்
சாகஸம் புரியும்
ஒரு தவளையைத் தேடி...!
லயன் காமிக்ஸ்
துப்பறியும் இரும்பு மனிதனின் அட்டகாசமான சாகஸம்!
ரூ. 4.00

விரைவில் எதிர்பாருங்கள்!







ஒரு கோச் வண்டியின்
கதை!
லயன் காமிக்ஸ்
லக்கி லூக் சாகஸம்!
காமெடி ஸ்பெஷல் நம்பர் 3
விலை ரூ. 5.00


நடுங்க வைக்கும் நிஜங்கள்!
லயன் காமிக்ஸ்
உருவாக்கப்பட்ட
புதிய தொடர்!
விலை ரூ. 5.00

# க்ரைம் க்விஸ் (15) விடை

"மரண மண்டலம்" இதழில் வெளிவந்த க்ரைம் க்விஸ் (15)க்கு எக்கச்சக்கமான வாசகர்கள் பதில் எழுதிக் குவித்து விட்டனர். 99% பதில்களும் சரியானவையே! குலுக்கல் மூலம் நமது லயன் டி-ஷர்ட் & கீ-செய்ன் பரிசு பெறும் மூன்று வாசகர்கள்:

1) மு. வள்ளி நாயகம்,
S/o. முருகானந்தம்,
60, அப்பர் சுவாமிகள் தெரு,
வண்ணார் பேட்டை,
திருநெல்வேலி - 3.

2) N. திலீப்,
S/o. P. நடராஜன்,
158, காமராஜபுரம் 4வது தெரு,
கோவை.

3) C. கிருஷ்ணமூர்த்தி,
வகுப்பு: IX - (A)
அரசு உயர்நிலைப் பள்ளி,
ஈசனத்தம், கரூர் (T.K.)
திருச்சி Dt.

பாராட்டுக்கள்! சரியான விடையை இனி பார்ப்போமா?

கொலையாளி போனை டயல் பண்ணும் போது விரல் அறுத்துக்கிட்டதாகச் சொன்னா. ஆனால் அந்த அறையில் உள்ளதோ பட்டன் சிஸ்டம் போன்! ஆகையால் இன்ஸ்பெக்டர் டேஞ்சர் சுலபமாய் கண்டுபிடித்து விட்டார்.

இம்மாத க்ரைம் க்விஸ் (17)க்கு விடையனுப்பக் கடைசித் தேதி: 15-1-95

விடையனுப்பும் போது இந்தக் கூப்பன் கட்டாயம் தேவை.

**க்ரைம் க்விஸ் (17)**
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த.பெ. எண். 374, சிவகாசி - 626 123.


ரூ.4/-
லயன்
காமிக்ஸ்



பிரின்ஸ் in ஆப்பிரிக்கா!
ரூ.4/-
லயன் காமிக்ஸ்